ஆகவே, இதில் கண்டறிய வேண்டியது என்னவென்றால், நடந்திருப்பது கடத்தலா, காதலா என்பதுதான். இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருக்கிறது. ஆகவே இது குறித்து அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகின்றது.

(இ) மின் இணைப்புத் துண்டிக்கப் பெறுவதால் விவசாயிகள் பாதிக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ''கோவை மாவட்டம் பெரிய நாயக்கன்பாளையத்தில் விவசாயிகள் மின் இணைப்பைத் துண்டித்ததால் பயிர்கள் காய்ந்து வீணாவதாலும் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்று கேட்டு திரு. ஆ. நடராசன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. சோ. அழகர்சாமி, திரு. பொ. உத்திராபதி. திரு. செ. சிவசாமி, திரு. கே. கந்தசாமி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்து உள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் பெரிய நாயக்கன் பாளையத்திலுள்ள விவசாயிகளின் மின் இணைப்புக்களை துண்டித்திருக்கிறார்கள். வருவாய்த் துறை அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் சேர்ந்து சென்று மின் இணைப்புகளைத் துண்டித்திருக்கிறார்கள். இவ்வாறு மின் இணைப்புகளைத் துண்டிப்பதற்குக் காரணம் என்னவென்றால் விவசாயிகள் சங்கம் கடந்த காலத்திலே நடத்திய போராட்டத்தின் விளைவுதான். ஆயிரக்கணக்கான விவசாயிகள் மின் கட்டணம் செலுத்தாமல் இருந்து வருகிறார்கள். அதன் காரணமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது என்கிற வகையில் 41 விவசாயிகளுடைய மின் இணைப்பைத் துண்டித்திருக்கிறார்கள், இந்தத் துண்டிப்பினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. 41 விவசாயிகளின் பிரச்சினையாக இதைக் கருதாமல் ஒரு போராட்டத்தை அடக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இன்றைய தினம் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் மூலம் ஏராளமான நிலங்கள் பாதிக்கின்ற நிலைமை ஏற்படக் கூடும். ஏறக்குறைய 25 ஆயிரம் பேர் இன்றையதினம் மின் கட்டணத்தைக் கட்டாமல் இருக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வரவேண்டியிருக்கிறது. கடந்த பல மாதங்களாக உயர்மட்டக் குழு போடப்பட்டும்

பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பிரச்சினைகளை தீர்க்கின்ற வகையில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆகவே இது ஏழை, நடுத்தர விவசாயிகளின் முக்கியமான பிரச்சினையாக இருப்பதாலும், உற்பத்தி பாதிக்கப்படுகின்ற முக்கியமான பிரச்சினையாக இது இருப்பதாலும் அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்போது செய்யப்பட்டிருக்கிற இந்த மின் துண்டிப்பு விவசாயிகள் கட்ட வேண்டிய பாக்கிக்காக அல்ல. கடந்த மூன்றாண்டு காலமாக விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். தொழிலாளர்கள், ஆசிரியர்கள், என். ஜி. ஓ-க்கள் மாதிரி விவசாயிகளும் தங்களுடைய பிரச்சினைகளுக்காகப் போராட்டம் நடத்துகிறார்கள்.

அடுத்து மதுரையிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசியதற்குப் பிறகும் இந்த மின்சாரத் துண்டிப்பு ஏற்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் சத்தம் பட்டி என்ற கிராமத்தில் நூற்றுக் கணக்கான போலீஸ் அதிகாரிகளும், ரெவின்யூ அதிகாரிகளும் இந்த மின்சாரத் துண்டிப்பு வேலையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதே மாதிரி கிழக்கு முகவை மாவட்டத்தில் கீழத்தூர், முத்து விஜயபுரம் போன்ற இடங்களில் மின் துண்டிப்பு நடத்தப்பட்டிருக்கிறது. அங்கே சில இடங்களில் தெரு விளக்குக்கூட எரியவில்லை.

[முற்பகல் 10-30].

அதுமட்டுமல்ல. இன்று அந்தப் பகுதியில் பல கிராமங்களில் இதுமாதிரி மின் துண்டிப்பு ஏற்பட்டிருக்கிற காரணத்தால் கிராமமே இருளில் மூழ்கியிருக்கிறது என்பதுமட்டுமல்லாமல், இன்றைக்கு கைக்கு வரக்கூடிய மகசூல் கூட கைக்கு வந்துசேர முடியாத நிலை இருக்கிறது. கடன்களைக் கட்டவும் அடுத்த ஆண்டு விவசாயம் செய்யவும் மகசூல் எடுக்க முடியாத அளவிற்கு இன்றைக்கு பெரிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உயர் மட்டக்குழு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தையின் போது கூட விவசாயிகளுக்கு இது தவிர பல்வேறு கஷ்டங்கள் இருப்பது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. மின் கட்டணம் தவிர, மீட்டர் சார்ஜ் நான்கு ரூபாய் என்று விவசாயிகள் பல்வேறு கட்டணங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. மின் துண்டிப்பு காரணமாக மகசூல் கிடைப்பதே கஷ்டமாக இருக்கிற நிலைதான் இருக்கிறது.

எனவே மற்றத் துறைகளில் உள்ளவர்களைக் கூப்பிட்டு பேசுகிறமாதிரி இவர்களையும் கூப்பிட்டுப் பேசி பிரச்சினையைத் தீர்ப்பதைவிட்டு மிகப் பெரிய போர் போன்று ஆயுதம் தாங்கிய

போலீஸை வைத்துக் கொண்டு அடக்குவது என்பது விவசாயிகள் மத்தியில் பெரிய பதட்ட நிலையை உருவாக்கியுள்ளது. இதனால் விவசாய உற்பத்தி நாசமாகக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே சம்பிரதாயமான முறையில் அவையின் அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தலைவர் அவர்கள் தீர்ப்பளிக்காமல்—விவசாயம் என்றால் தொழில் வளர்ச்சியும் இதில் இணைந்துள்ளது—அவையை ஒத்திவைத்து எல்லோரும் பேசட்டும்; ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் பேசட்டும், மூன்று ஆண்டுகளாக பாக்கி இருப்பதை எப்படி வசூலிப்பது என்பதைப்பற்றி எல்லாம் விரிவாகப் பேசி ஒரு முடிவு எடுக்கலாம் என்பதற்காக அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் செய்யவில்லை என்றால், விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டு, கலக நிலைமை வந்து விடக்கூடாதே என்பதற்காகத்தான், அந்த நல்லெண்ணத்தில்தான் கூறுகிறேன். பாராளுமன்றத்தில் கூட பல விஷயங்கள் பற்றி அவையை ஒத்திவைத்து விவாதித்திருக்கிறார்கள். எனவே சம்பிரதாயமான முறையில் அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறாமல் இந்தப் பிரச்னை பொறுத்து ஒரு முழு விவாதம் நடத்தி, ஆளும் கட்சி உறுப்பினர்களும், மற்றக் கட்சி உறுப்பினர்களும் கருத்துக்களைச் சொல்லி ஒரு முடிவுக்கு வரவேண்டிய அவசியமான நிலை ஏற்பட்டிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல் கோவை மாவட்டத்தில் பெரியநாய்க்கன்பாளையத்திலும், முகவை மாவட்டத்தில் கீழத்தூவல் போன்ற இரண்டு கிராமங்களிலும், சேலம் மாவட்டத்தில் சக்கம்பட்டியிலும் மின் கட்டணம் கட்டவில்லை என்ற காரணத்திற்காக அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, போலீஸ் சென்று விவசாயிகளை மிரட்டி ஒதுக்கிவிட்டு மின் இணைப்பைத் துண்டித்திருக்கிறார்கள். குறிப்பாக கீழத்தூவலைப் பொறுத்த வரையில் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து வந்த செய்தி அங்கு எந்தவிதமான விளக்கும் எரியாத அளவிற்கு மின் துண்டிப்பு செய்திருக்கிறார்கள் என்பது தான். வரி கொடா இயக்கத்தைக் கூட விவசாயிகள் ஆரம்பிக்க வேண்டும் என்றும் அதற்குதான் தலைமை தாங்குகிறேன் என்றும் போர் முரசு கொட்டி வருகிற திரு. நாராயணசுவாமி நாயுடு தலைமையில் உள்ள விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இயங்கி வருவதும், அதற்காக மக்கள் பேராதரவு திரண்டு வருவதையும் அறிந்து அரசு உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று முன் ஏற்பாடாக இந்த நடவடிக்கையை எடுக்கிறது என்று கருதுகிறேன்.

[திரு. கே. கந்தசாமி] [1979 மார்ச் 6

முதல் அமைச்சர் அவர்கள் மதுரைக்கு வந்து பேசியபோது, மதுரைச் சுற்றுப் பயணத்தின்போது, மிகக் கடுமையாக எச்சரித்தார்கள். வரி கொடுத்தால்தான் அரசாங்கம் இயங்க முடியும் அப்போதுதான் மக்களுக்கான பல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற வகையில் வரி கொடுக்காமல் இருந்தால் அரசாங்கம் பார்த்துக் கொண்டிராது, மே 14-ம் தேதி வரை அவகாசம் தருகிறேன். இதற்குள் விவசாயிகள் சிந்தித்து செயல்பட வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தார்கள். அதை நான் பாராட்டுகிறேன். வரி கொடுக்கவில்லை என்றால் எந்த அரசும் செயல்பட முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இம்மாநிலத்திலும் சரி, மற்ற மாநிலங்களிலும் சரி, ஆசிரியர்கள், தொழிலாளர்கள், மருத்துவர்கள், இப்படி பல துறைகளில் வேலை செய்பவர்கள் போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு ஊதியம் இல்லாமல் இல்லை. ஊதியம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் ஊதிய உயர்வு வேண்டுமென்றும் இன்னும் பிற சலுகைகள் வேண்டுமென்றும் போராடுகிறார்கள். ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில், இங்கு ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இதுவரை அவர்களது அறிக்கையைக் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகுதான் அரசு அதன்மீது தெளிவானதொரு அறிக்கையை அளிக்க முடியும். அதைப் பரிசீலனை செய்த பிறகு. இந்த மாதம் 14, 15 தேதி வாக்கில் அவர்கள் ரிப்போர்ட் கிடைத்துவிடும் எனிறு சொல்லப்படுகிறது. இதில் ஒரு மெத்தனமான போக்கு இருக்கிறது. அந்தக் கமிஷனைப் பொறுத்தவரையில் என்பதைத்தான் நான் சுட்டிக்கட்ட விரும்புகிறேன்.

காரணம் அந்த அறிக்கையை நம்பி காலத்தை ஒத்தி போட்டு கொண்டிருக்கவும் எங்களுக்கு விமோசனம் என்ன என்று கேட்டு இன்றைக்கு விவசாய மக்கள் மிகவும் வேதனையான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே போதிய விலை கிடைக்கவில்லை. மேலும் வெள்ளத்தால், வறட்சியால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக பல கட்டணங்களை அவர்களால் செலுத்த முடியவில்லை.

குறிப்பாக விவசாயிகன் மின்சாரக் கட்டணத்தை செலுத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய விளை பொருளுக்கு நல்ல கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும். மின்சாரக் கட்டண குறைப்பு வேண்டும் என்ற பல அம்சங்களை வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதன் அடிப்படையில் தான் மின்சாரக் கட்டணத்தையும் இப்போது செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு இதை மெத்தனமாக விட்டுவிடக்கூடாது. ஏற்கனவே அவர்கள் வெள்ளத்தால்,

1979 மார்ச் 6] [திரு, கே. கந்தசாமி]

வரட்சியால் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் கதிர் காய் வந்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மின் துண்டிப்பு என்பது தாங்க முடியாத ஒன்று. ஒரு மணி நேரம் மின் துண்டிப்பு ஏற்பட்டால் கூட, மிளகாய் போன்றவைகளில் காய் உதிர்ந்து விடும். இப்பிரச்னையை ஏதோ ஆசிரியர்கள், மாணவர்கள் போராட்டம் மாதிரி என்று கருதாமல் இது நாடு தழுவிய ஒரு பிரச்னை, உயிர் பிரச்னை, ஒவ்வொரு சம்சாரியும் இன்றைக்கு விளைவித்து நெல்லை இங்கு அனுப்பாவிட்டால் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நாம் பட்டினியில் இருக்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும். இது உயிர்ப் பிரச்னையாக நாடு தழுவிய பிரச்னையாகஇருக்கின்ற காரணத்தால், இதைப்பற்றி இந்த அவையில் விரிவாகப் பேசி, இப்படிப்பட்ட போராட்டங்களுக்கு எல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில் இதைப்பற்றி விவாதித்து, விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பெரிய நாய்க்கன் பாளையத்தில் மூன்று ஆண்டுகளாக மின்சாரக் கட்டணம் கட்டாமல் இருந்து வந்தது. 9—2—1979 அன்று மின் வாரியம் மின்சாரக் கட்டணததை உடனடியாக கட்ட வேண்டும் என்றும், இல்லாவிட்டால் மின் துண்டிப்பு நடத்தப்பட வேண்டி இருக்கும் என்றும் ஒரு நோட்டீஸ் கொடுத்தது. ஆனால் அவர்கள் மின் கட்டணம் செலுத்தவில்லை. 5—3—1979 அன்று நேற்றைய தினம் மின்சார வாரியத்தைச் சேர்ந்தவர்கள், காவல் துறையினரையும் துணைக்காக அழைத்துக் கொண்டு சென்று பெரியநாயக்கன் பாளையத்தில் 41 பம்பு செட்டுகளுக்கு மின் துண்டிப்பை செய்திருக்கிறார்கள். மேலும் ஒரு நான்கு பேர்கள் பணமும் கட்டியிருக்கிறார்கள்.

அதே போல் சேலம் மாவட்டத்தில் ஐக்கம்பட்டியில் 27—2—1979-ல் நோட்டீஸ் தரப்பட்டு மின்கட்டணம் செலுத்தாததினால், மூன்று ஆண்டுகளாக நிலுவையாக இருந்த மின் கட்டணம் செலுத்தாதினால், 5—3—1979 அன்று மின் துண்டிப்பை மின்வாரியம் மேற்கொண்டது. மின்வாரியத்தினருக்கு பாதுகாப்புத்துறை பாதுகாப்பு தந்தது. இதில் 21 பம்பு செட்டுகளுக்கு மின் துண்டிப்பு நடத்தப்பட்டது. இரண்டு பேர் பணம் தந்திருக்கிறார்கள். நேற்று நடந்த மின் துண்டிப்பில் எந்தவிதமான அசம்பாவிதமான சம்பவங்களும் நடைபெறவில்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் கீழத்தூவல், முத்துவிஜயபுரம் போன்ற கிராமப் பகுதிகளைப் பற்றியும் சொன்னார்கள். அத்தகைய பகுதிகளுக்கு இது போன்ற நடவடிக்கைகளுக்கும் எங்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான தொடர்பும் இருப்பதாக தெரியவில்லை. வேறு ஏதாவது காரணத்தினால் மின்சாரம் முழுவதும் நின்று விட்டிருக்குமோ என்னமோ தெரியாது. ஒரு ஊர் முழுவதிற்கும் மின்சாரம் கொடுக்கக்கூடாது, அல்லது ஒரு பகுதி முழுவதிற்கும் மின்சாரம் கொடுக்கக்கூடாது என்பது நோக்கமல்ல. அப்படி செய்யவேண்டுமென்றால் அது மிகவும் சுலபமான காரியம். ஒவ்வொரு ஊருக்கும் போய் இதைச் செய்ய வேண்டியதில்லை. இருபது மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டே இதை செய்து விடலாம், இப்படி ஒவ்வொரு ஊருக்கும் சென்று நடத்தவேண்டும் என்பதில்லை... (குறுக்கீடு) இதில் அது சம்பந்தப்பட்டதல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். மின்கட்டணத்தைப் பொறுத்தவரையில், இரண்டு முக்யமான கருத்துக்களை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-40]

விவசாயிகளோடு பேசின அத்தனை சுற்றுப் பேச்சுக்களிலும் மாண்புமிகு முதல்வர்களோடு நானும் இருந்தேன். மின்சாரக் கட்டணத்தைப் பற்றி முதன் முதலாகப் பேச்சு வந்த போது, அனைத்துக்கட்சியைச் சார்ந்த விவசாய சங்கத் தலைவர்களும் கலந்து கொண்டனர். திரு. நாராயணசாமி நாயுடு, திரு பாலசுப்பிரமணியம் போன்றவர்களும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் எல்லோரும் சேர்ந்து வற்புறுத்தியது, பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்ற வேறுபாடே இருக்கக் கூடாது என்பதாகும். எல்லோருக்கும் பதினான்கு பைசா என்ற தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள்.

ஆனால், கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்ற வித்தியாசம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைப்பற்றி நன்றாக யோசித்து, பதினைந்து பைசா என்று எல்லோரும் கட்டுகிறார்கள் என்ற அடிப்படையில், பெரிய விவசாயிகளுக்கு பதினைந்து பைசா என்றும், சிறு விவசாயிகளுக்கு நானாகவே இரண்டு பைசா குறைத்து பனிரெண்டு பைசா என்று அறிவிக்கிறேன் என்று சொன்னார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. திரு. நாராயணசாமிநாயுடு அவர்கள் இந்தக் கூட்டத்திலே சொன்னார்கள். இப்போது என்னுடைய கையில் மாலை இல்லையே என்று வருத்தப்படுகிறேன். மாலை இருந்தால் நிச்சயமாக முதல் அமைச்சர் அவர்களுக்குப் போடுவேன்

1979 மார்ச் 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

என்று குறிப்பிட்டார்கள். அதை நான் என் காதாலே கேட்டேன்: நேரிலே பார்த்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். எனவே, மின்சார கட்டணத்தைப் பொறுத்த வரையில் பிரச்சினை தீர்ந்துவிட்டது.

இன்றைக்கு இருப்பது, விவசாயிகள் கடன் தொல்லைகள், வட்டித் தொல்லைகள், கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற தொல்லைகள், இவைகளுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகை யிலே பேசி வருகிறார்கள். இந்த பிரச்சினையில் முடிவு வருகின்ற வரையில், எந்தக் காரியங்களையும் நடத்த விடப் போவதில்லை என்பது. உயர் மட்டக் குழு இந்தப் பிரச்சி னையை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதற்கும் மின் கட்ட ணத்திற்கும சம்பந்தமில்லை. மின் கட்டணத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே, இந்த மின்கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்று, அதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இந்த உச்ச மட்டக் குழுவின் பரிந்துரைகளை அது பாதிக்காது. இந்தக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் எப்படிக் கடன் வசூலிப்பது, வரியை வசூலிப்பது, அதற்கான கால வரையறையை தள்ளிப் போடுவது என்பதுதான். இதைத் தான் முதல் அமைச்சர் அவர்கள் மதுரையிலே வெளியிட்டார்கள் என்பதை நான் குறிப் பிட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. திரு நாராயணசாமி நாயுடு போன்ற வர்கள் நடத்துகின்ற இயக்கம் வரி கொடா இயக்கம் என்பது தான். வரியைக் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்த மின்சாரத்தைப் பொறுத்த வரையில், நாம் பெறுகின்ற மின்சாரத்திற்கான விலையை நாம் கொடுக்கிறோம் என்பதைத் தவிர, இது வரி அல்ல. This is not a tax, This is a fare எப்படி பஸ்ஸிலே போவதற்குக் கட்டணம் கொடுக்கிறோமோ, எப்படி ரயிலிலே போவதற்குக் கட்டணம் கொடுக்கிறோமோ, அதைப்போல் நாம் பயன் படுத்தும் மின்சாரத்திற்கு கட்டணம் கொடுத்துத்தான் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும். எனவே இது வரியல்ல. எனவே, இந்தக் கட்டணத்தை வசூலிப்பது நமது கடமை. இந்தக் கூட்டத் தொடரிலேயே மின்வாரிய நிதி நிலை அறிக்கை வரயிருக்கிறது. அப்படி அறிக்கை வருகிற போது, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கப் போகிறார் கள். எவ்வளவு நஷ்டம், ஏன் நஷ்டம் ஏற்பட்டது என்று கேட்கத்தான் போகிறார்கள். நமக்கு நிலுவையாக இருப்பது மட்டும் சுமார் 9 கோடி ரூபாய். ஆகவே, தீர்ந்தீவிட்ட பிரச்சினை. இதிலே இவ்வளவு நிலுவை அவசியமில்லை அதோடு மட்டுமல்ல. அப்படி பேசியபோதுகூட, விவசாயிகள்

இதை எளிதாகக் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டது. எனவே, இது தீர்ந்துவிட்டப் பிரச்சினை. எனவே, இந்தப் பிரச்சினைக்கும், மற்றப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நிச்சயமாக சம்பந்தமில்லை.

கடன் தொல்லை, வறட்சி, கொள்முதல் போன்றவைகளைக் குறித்து இந்த அரசு பரிசீலனை செய்து, விவசாயிகளுக்கு எந்த அளவு நன்மை செய்யவேண்டுமோ, அதைச் செய்யும். ஆனால் அதே நேரத்தில் மின் வாரியம் என்பது ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் நிறுவனம் அல்ல. அதுவும், மக்களின் முதலைப் போட்டு நடத்தப்படும் நிறுவனம் ஆகும். அந்த நிறுவனம் கேரளத்திலும், நெய்வேலியிலும் மின்சாரத்தை வாங்குவதற்காக கோடிக்கணக்கான ரூபாயைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த நிறுவனம் நல்ல முறையிலே நடைபெற, அத்தகைய பாக்கிகளை வசூலிப்பது நமது கடமை; அதற்கான நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புவது, விவசாயிகள் உபயோகப்படுத்தும் மின்சாரத்திற்கு செலுத்துவது கட்டணத் தொகையாகும்; சர்க்காருக்குச் செலுத்தும் வரியல்ல. கிடைக்கின்ற பொருளுக்கு, கொடுக்கவேண்டிய விலை என்கிற அடிப்படையில் இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றது. இப்படிப்பட்ட ஒரு சுமுகமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், தொடர்ந்து இந்த சபையை நல்ல முறையிலே நடத்தவேண்டியிருப்பதாலே, இந்த சபையை ஒத்தி வைத்து இந்தப் பொருள் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை பேரவைத் தலைவர் மூலமாக நான் தெரிவிதுக்கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு அதன் பேரில் விளக்கங்கள் கேட்க முடியாது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமச்சர் அவைர்களின் விளகத்திற்குப் பிறகு பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.